DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 567/25

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : மஞ்சு

Husband's Name : மாரப்பன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணி கிழக்கு தெருவில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். எனது கணவர் வழக்கறிஞராகவும், கரூர் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினராகவும் உள்ளார். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள

கையொப்பம் என்னுடையது. **புகார் மனுவிலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கடந்த 29.07.2022ம் தேதி காலை 08.00 மணியளவில் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது, டும் லைட்டை திருடி காரில் வைத்துவிட்டு, சுவரில் பொருத்தியிருந்த டியுப் லைட்டை உடைக்கும் சத்தம்கேட்டு வந்து பார்த்தபோது அசிங்கமாக திட்டியதாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 567/25

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

Name : தில்லைக்கரசி

Husband's Name : கருப்பண்ணன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாந்தோணிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் தமிழ் செல்வன் அவருடன் பணிபுரிந்த வகையில் அவர்களுடைய கையொப்பம் எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு

ஆவணங்களை பார்வையிட்டு கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.07.2022ம் தேதி உதவி ஆய்வாளர் தமிழ் செல்வன் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, மஞ்சு என்பவர் எதிரியுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய கு.எண்.326/2022, ச.பி.294(பி),379,427,506(2) இதசவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **மஞ்சு கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சி ஜீவானந்தம், தர்மலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர், மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த உடைந்த டும் லைட்டை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளர். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன்பேரில் 29.07.2022ம் தேதி 11.45 மணியளவில் கரூர் காவல்நிலையம் பிள்ளையார் கோவில் முன்பு நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் பெரியசாமி, ஏகாம்பரம் முன்னிலையில் **எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான தாங்கள் என்னுடன் வந்தால் மாரப்பன் வீட்டில் டும் லைட்டுகளை திருடிக் கொண்டு காரில் ஏற்றி சென்ற அந்த காரை அடையாளம் காட்டி, அதிலிருக்கும் டும் லைட்டுகளையும் எடுத்து ஆஜர் செய்கிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர்

எதிரியை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. உடைந்த டும் லைட் அ.சா.பொ.1 ஆகவும், அருவாள் அ.சா.பொ.2 ஆகவும், பல்பு எல்இடி அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், உதவி காவல் ஆய்வாளர் தமிழ் செல்வன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரைப் பெற்று எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம், கைப்பற்றுதல் மகசர் போன்ற ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும், எதிரியை சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**